## தலைவரின் மகனாக, முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக அன்போடு கேட்கிறேன்!

# தலைவர்கள் பாராட்டும் இந்தியாவின் முதன்மையான முதலமைச்சருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்!

### கொளத்தூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு!

சென்னை,ஏப்.10-

**சென்னை மாவட்டம், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர், கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து, தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``ஒட்டுமொத்த இந்தியாவே இப்போது திரும்பிப் பார்க்கக்கூடிய ஒரு முதலமைச்சர் என்றால், நம் முதலமைச்சர்தான். முதன்மையான முதலமைச்சர் என்று, இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லாத் தலைவர்களும் நம் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள். உதயசூரியன் சின்னத்தில் நம் தலைவருக்கு வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன். பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகப் பூரிப்போடு சொல்ல வேண்டும் என்றால், டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன்" என்று குறிப்பிட்டார்.**



கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

தொடர்ந்து 10 நாட்களாக, தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுப் பேசி, நம் வெற்றி வேட்பாளர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும், நம் கூட்டணிக் கட்சியினருக்கும் பிரச்சாரத்தை மேற்கொண்டதனால் தொண்டை போய்விட்டது. மருத்துவர் இரண்டு நாள் பேசக்கூடாது என்று கூறிவிட்டார்கள். மருத்துவர் சொன்னதைக் கேட்க முடியாது. எனது அப்பா, கொளத்தூர் தொகுதியில் நிற்கிறார், சென்று அவருக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று ஓடிவந்துவிட்டேன்.

### தலைவருக்குத் தொண்டனாக...

அதாவது முதலமைச்சருக்கு, துணை முதலமைச்சர் வாக்குக் கேட்டு வந்திருக்கிறேன். தந்தைக்கு மகன் வாக்குக் கேட்டு வந்திருக்கிறேன். எனக்கு இன்னொரு பெரிய பெருமை என்ன தெரியுமா? நம் தலைவருக்கு ஒரு தொண்டனாக வாக்குக் கேட்க வந்திருக்கிறேன். இவ்வளவு அன்போடும் எழுச்சியோடும் ஆரவாரத்தோடும் வரவேற்புக் கொடுத்திருக்கிறீர்கள், உங்கள் அத்தனை பேருக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் 10 நாட்களாகத் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுப் பேசிக்கொண்டு இருக்கிறேன். மக்களைச் சந்தித்து ஒவ்வொரு தொகுதியாகச் சென்று பேசிக்கொண்டு இருக்கிறேன். நியாயமாகப் பார்த்தால் நான் இந்தத் தொகுதிக்கு வந்து வாக்குக் கேட்கக் கூடாது. ஏன் தெரியுமா? நீங்களெல்லாம் ஏற்கனவே வெற்றி வேட்பாளரை முடிவு செய்து வைத்திருக்கிறீர்கள். ஏன் தெரியுமா வந்திருக்கிறேன்? நீங்கள் கோபித்துக் கொள்வீர்கள். இவன் ஒருவனாகச் சென்று எல்லோருக்கும் வாக்குக் கேட்கிறான், அவனுடைய தந்தைக்கு வாக்குக் கேட்க வரமாட்டேன்கிறான் என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது என்பதற்காக வாக்குக் கேட்டு வந்திருக்கிறேன்.

கொளத்தூர் தொகுதி, இன்று தமிழ்நாட்டிலேயே... இல்லை, இந்தியாவிலேயே நம்பர்-ஒன் தொகுதி, இந்தத் தொகுதி. நட்சத்திரத் தொகுதிகள் பல இருக்கலாம், ஆனால், இந்தியாவிலேயே இது சூப்பர் ஸ்டார் தொகுதி என்றால், இந்தத் தொகுதிதான். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கிற ஒரு மகத்தான தலைவரைச் சட்டமன்றத்துக்கு அனுப்பி வைக்கக்கூடிய பெருமை வாய்ந்த தொகுதி இந்தத் தொகுதி. இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்நாட்டின் முதலமைச்சரை, இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சரைத் தேர்வு செய்து அனுப்பி வைக்கிற தொகுதி, உங்கள் கொளத்தூர் தொகுதி. ஒரு சட்டமன்றத் தொகுதி எப்படி இருக்க வேண்டுமோ அதற்கு முன்னோடியாக இருக்கக்கூடிய தொகுதி இந்தத் தொகுதி.

### தலைவர்களின் பாராட்டு

அனிதா அச்சீவர்ஸ் அகாடமியாக இருக்கட்டும், அன்னை தயாளு அம்மாள் அறக்கட்டளை என, இன்று இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரு முன்னுதாரணமாக இருக்கக்கூடிய தொகுதி நம் கொளத்தூர் தொகுதி. ஒட்டுமொத்த இந்தியாவே இப்போது திரும்பிப் பார்க்கக்கூடிய ஒரு முதலமைச்சர் என்றால், நம் முதலமைச்சர்தான். இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லா தலைவர்களும் நம் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள், முதன்மையான முதலமைச்சர் என்று. இவை எல்லாவற்றிற்கும் காரணம் இந்தத் தொகுதிதான். நீங்கள்தான் அவரைத் தேர்ந்தெடுத்து சட்டமன்றத்துக்கு அனுப்புகிறீர்கள்.

இந்தத் தொகுதி அமைந்த பிறகு மூன்று முறை நம் தலைவரை நீங்கள் சட்டமன்ற வேட்பாளராகத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். நான் இங்கு வந்தது எதற்குத் தெரியுமா? மூன்று முறையும் அதாவது ஒவ்வொரு முறையும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்கிறீர்கள். கடந்த முறை 70 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்திருக்கிறீர்கள். இந்த முறை ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும்.

இன்று ஒட்டுமொத்த தமிழ்நாடும் நம் தலைவர் தலைமையில் ஓரணியில் நாம் திரண்டு இருக்கிறோம். நம் தலைவர் மீண்டும் மீண்டும் சொல்கிறார், இந்தச் சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணி மற்றும் தமிழ்நாடு அணிக்கு இடையிலானது. தமிழ்நாடு அணி இந்தச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றுக் காட்டுவோம். டெல்லி அணியை ஓட ஓட விரட்ட வேண்டும். டெல்லி அணியில் மோடி, மோடியின் முதன்மை அடிமை எடப்பாடி பழனிசாமியும் இருக்கிறார்கள்.

234 தொகுதிகளிலும் வெற்றிபெறுவது நிச்சயம். அதில் இந்தக் கொளத்தூர் முதன்மைத் தொகுதியாக அதிக வித்தியாசத்தில் வெற்றிபெறக்கூடிய தொகுதியாக இருக்க வேண்டும். முதலமைச்சருக்கு வாக்கு செலுத்தும் அரிய வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பைத் தவறவிட்டுவிடாதீர்கள். நான் உங்களிடம் கேட்பது எல்லாம், எதிர்த்து நிற்கிற வேட்பாளருக்கு டெபாசிட் போய்விட வேண்டும். அந்த அளவுக்கு மிகப்பெரிய வெற்றியாக இருக்க வேண்டும்.

### கொளத்தூர் திட்டங்கள் சாதனைகள்

இந்தக் கொளத்தூர் தொகுதிக்கு எத்தனையோ திட்டங்களை... சாதனைகளை நம் முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், நம் முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குக் குறைந்தது வாரத்துக்கு ஒருமுறை வந்து ஏதாவது நலத்திட்டப் பணிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். நான் 15 நாளுக்கு ஒரு முறை இந்தக் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு வந்து உங்களையெல்லாம் பார்த்திருக்கிறேன். அண்ணன் சேகர்பாபு அவர்கள் இங்கேயேதான் இருந்துகொண்டு இருக்கிறார், ஆண்டு முழுவதும் இங்கே இருக்கிறார். இவ்வளவு திட்டங்களை இந்த ஐந்து ஆண்டுகளில் செய்து இருக்கிறோம் என்கிற உரிமையோடு இன்று மக்களைச் சந்தித்து வாக்குக் கேட்க வந்திருக்கிறோம்.

கொளத்தூர் மற்றும் வில்லிவாக்கத்தை இணைக்கின்ற எல்.சி-1 `சிட்டிபாபு மேம்பாலம்' கட்டிக் கொடுத்தது நம் தலைவர்.

பூம்புகார் நகரில், கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

ரெட்டேரி சந்திப்பில் குளிரூட்டப்பட்ட பேருந்து நிலையம், திரு.வி.க.நகரில் பேருந்து நிலையம், பெரியார் நகரில் பேருந்து நிலையம் - இதையெல்லாம் நம் முதலமைச்சர் உங்களின் தொகுதிக்குச் செய்து கொடுத்திருக்கிறார்.

பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் அனைத்துக் கட்டமைப்பு மற்றும் நவீன வசதியுடன் ரத்த சுத்திகரிப்பு மையம் அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

கொளத்தூர் தொகுதியில் 13 மாநகராட்சி மற்றும் அரசுப் பள்ளிகளைப் புதிய கட்டமைப்புகளுடன் இணைத்து அனைத்து வசதிகளுடன் கூடிய நவீனப் பள்ளிகளாக நம் முதலமைச்சர் உங்களின் சட்டமன்ற உறுப்பினர் மாற்றிக் கொடுத்திருக்கிறார்.

இன்று தமிழ்நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக, முதன்மையான தொகுதியாக `முதல்வர் படைப்பகம்' இங்கேதான், கொளத்தூர் தொகுதியில்தான் முதன்முதலாக ஆரம்பிக்கப்படுகிறது. இன்று அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளுக்கும் முதல்வர் படைப்பகம் ஆரம்பிக்கப்படுகிறது என்றால் முதன்முதலாக ஆரம்பித்தது இந்தத் தொகுதிதான்.

கல்விச் சோலை மற்றும் நவீன வசதியுடன் கூடிய நூலகங்கள் தொகுதி முழுவதும் அமைக்கப்பட்டிருக்கிறது.

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பாகப் பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டு, இன்று கௌதமபுரம், ஜமாலியா குடியிருப்பு மற்றும் ராஜாகார்டன் பகுதியில் கிட்டத்தட்ட 1,200 புதிய குடியிருப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குச் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

கணேஷ் நகர் பகுதியில் கூடுதல் திறன் கொண்ட புதிய துணை மின்நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. நேர்மை நகர் பகுதியில் கூடுதல் திறன்கொண்ட மின்நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை, ஜமாலியா லேன் திட்டத்தில் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 130 அடுக்குமாடிக் குடியிருப்புகள். பல உடற்பயிற்சிக் கூடங்கள், நியாயவிலைக் கடைகள், அங்கன்வாடிகள், திருமண மண்டபங்கள் - திரு.வி.க. நகரில் காமராஜர் திருமண மண்டபம் - இப்படி ஏகப்பட்ட திட்டங்களை நம் அரசு இந்தத் தொகுதிக்குச் செய்து கொடுத்திருக்கிறது. இந்தத் தொகுதிக்கு மட்டும் இல்லை, இன்று தமிழ்நாடு முழுவதும் பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் செய்து கொடுத்திருக்கிறார்.

### முதலமைச்சரின் முதல் கையெழுத்து

கடந்த முறை ஆட்சிக்கு வருவதற்கு முன்பு நம் தலைவர் சொன்ன முதல் வாக்குறுதி. பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம். நம் தலைவர் முதலமைச்சரான உடனேயே போட்ட முதல் கையெழுத்துப் பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம், 'மகளிர் விடியல் பயணம்' திட்டம். ஒவ்வொரு மகளிரும் மாதம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் மாதந்தோறும் சேமித்திருக்கிறார்கள்.



அரசுப் பள்ளியில், ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய குழந்தைகள் காலையில் பள்ளிக்கூடத்துக்கு வந்த உடனேயே சாப்பிட வேண்டும் என்று தரமான முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறோம். 19 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தில் பயன்பெறுகிறார்கள்.

அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் போய் சேர்ந்தாலும், தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகையாக மாதந்தோறும் 1,000 ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

`நான் முதல்வன்' திட்டத்தில் 3 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். மடிக்கணினித் திட்டம், இப்பொழுது மூன்று மாதத்துக்கு முன்னாடி அறிவித்து ஒரே மாதத்தில் 10 லட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு, மடிக்கணினி கொடுத்திருக்கிறோம்.

### மகளிர் உரிமைத் தொகை திட்டம்

`கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்'. இன்று ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு நம் தலைவர் உரிமைத் தொகை திட்டத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த உரிமைத் தொகை திட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.க-வும் பா.ஜ.க-வும் திட்டம் போட்டார்கள். தேர்தலைக் காரணங் காட்டி மூன்று மாதம் நிறுத்த வேண்டும் என்று நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். ஆனால், நம் தலைவர் என்ன செய்தார். ``நான் 1,000 ரூபாய் கொடுப்பதை நிறுத்துகிறாயா? நான் 5,000 ரூபாய் கொடுக்கிறேன்'' என்று பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் - மூன்று மாதத்துக்குச் சேர்த்து 3,000, கோடைக்கால சிறப்பு நிதி 2,000 என்று 5,000 ரூபாயை நம் தலைவர் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு ஒரே தவணையில் (பேமெண்ட்) கொடுத்தார்.

முதலமைச்சர் காலையில் ஆறரை மணிக்கு மகளிரின் வங்கிக் கணக்கில் பணத்தை அனுப்பினார். ஒன்பது மணிக்கு நீங்கள் வங்கிக்குச் சென்று பணத்தை எடுத்துவிட்டீர்கள். ஏன்? மோடி இந்தப் பணத்தையும் எடுத்துவிடுவார், வங்கியில் குறைந்தபட்ச இருப்பு இல்லை என்று சொல்லி எடுத்துவிடுவாரோ என்ற அந்தப் பயத்தில் பணத்தை எடுத்துவிட்டீர்கள். அவ்வளவு விழிப்புணர்வுடன் நம் மகளிர் இருக்கிறார்கள்.

### புதிய வாக்குறுதிகள்

இது தவிர பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம்.

மகளிர் உரிமைத் தொகை: 1,000 இல்லை, ஆட்சி அமைந்த உடனே 2000-ஆக உயர்த்தித் தருவோம்.

காலை உணவுத் திட்டம்: ஐந்தாம் வகுப்பு வரைக்கும் இல்லை, எட்டாம் வகுப்பு வரைக்கும் விரிவுபடுத்தப்படும்.

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 5 லட்சம் வரைக்கும் எந்தவிதப் பிணையும் இல்லாமல் கடன் கொடுக்கப்படும்.

முதியோர் உதவித்தொகை: 1,200 இல்லை, 2,000-ஆக உயர்த்தித் தரப்படும்.

கல்வி உதவித் தொகை: 1,000 இல்லை, 1,500-ஆக உயர்த்தித் தரப்படும்.

கலைஞர் கனவு இல்லம்: அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் பேருக்கு வீடு கட்டித் தரப்படும்.

### 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன்

முக்கியமான வாக்குறுதி சொல்லியிருக்கிறோம். ஆட்சி அமைந்த உடனே எல்லா மகளிருக்கும் நம் முதலமைச்சர் அவர்கள் 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன் தருவார்கள். அந்தக் கூப்பனை வைத்து மகளிர் அவர்கள் வீட்டிற்கு என்ன தேவை என்பதை அவர்களே முடிவு செய்து ஃபிரிட்ஜ், மிக்ஸி, குக்கர், டிவி, ஏ.சி. என எதுவாக இருந்தாலும் மகளிரின் விருப்பம். அதை நீங்களே முடிவு செய்து நீங்களே வாங்கிக்கொள்ளலாம் என்று நம் முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

நாம் இவ்வளவு திட்டங்களைச் செய்திருப்பதனால்தான் இன்று இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு நம்பர் 1 மாநிலமாக உயர்ந்துள்ளது. வளர்கின்ற மாநிலங்களில் இரட்டை இலக்க வளர்ச்சி, 11.19% வளர்ச்சியோடு இன்று இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்திருக்கிறது.

நாம் இவ்வளவு திட்டங்கள் செய்திருக்கிறோமே, இவ்வளவு சாதனைகள் செய்திருக்கிறோமே, ஒன்றிய அரசு, ஒன்றிய பா.ஜ.க.அரசு நமக்குத் துணையாக நிற்கிறதா? நமக்கான திட்டங்களைக் கொடுக்கிறார்களா? நமக்கு ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு என்று எந்தத் திட்டமும் கிடையாது. `தமிழ்நாடு' என்கிற பெயரே பட்ஜெட்டில் இல்லை. இப்படி தமிழ்நாடு தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க. அரசால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசைத் தமிழ்நாடு புறக்கணிக்க விரட்டி அடிக்க வேண்டும். அதற்கான தேதிதான் ஏப்ரல் 23. இன்னும் 15 நாட்கள் இருக்கின்றது.

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது எல்லாம், நீங்கள் அத்தனை பேரும் முடிவு செய்துவிட்டீர்கள், உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று. நீங்கள் முடிவு செய்துவிட்டது மட்டும் போதாது. உதயநிதி வந்தார், வாக்கு கேட்டார், திட்டங்களைச் சொன்னார், வாக்குறுதி கொடுத்திருக்கிறார், கிளம்பிச் சென்றுவிட்டார் என்று கலைந்து போகக்கூடாது. அடுத்த 15 நாட்கள் களத்தில் நீங்கள் இறங்கிப் பிரச்சாரத்தை நீங்கள் செய்ய வேண்டும்.

### பிரச்சாரம் செய்யுங்கள்

ஒவ்வொரு தெருவாக, ஒவ்வொரு பகுதியாக, ஒவ்வொரு வீடாக, ஒவ்வொரு வாக்காளராகச் சந்தித்து தி.மு.கழக திட்டங்கள், நம் முதலமைச்சர் என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறார், ஆட்சி அமைந்தால் என்னென்ன திட்டங்கள் கொண்டு வருவோம், மீண்டும் அ.தி.மு.க. - பா.ஜ.க அடிமைக் கூட்டணி தமிழ்நாட்டுக்குள் நுழைந்துவிட்டது என்றால் தமிழ்நாட்டை எவ்வளவு பின்னோக்கி இழுத்து சென்றுவிடுவர்கள் என்று நீங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்தீர்கள் என்றால், நிச்சயம் இந்தத் தொகுதியில் நம் தலைவர் அவர்கள் ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் நிச்சயம் வெற்றிபெறுவார்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகப் பூரிப்போடு சொல்ல வேண்டும் என்றால் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன்.

உதயசூரியன் சின்னத்தில் நம் தலைவருக்கு வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து அனுப்புங்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கப் போகிற தொகுதி நம் கொளத்தூர். அதைத் தேர்ந்தெடுக்கப் போவது நீங்கள் என்பதை மனத்தில் வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சாரத்தை அடுத்த 15 நாள் மக்களிடம் கொண்டு சென்று சேருங்கள்.

உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.




உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் க. சுந்தர் வாலாஜாபாத் தெற்கு ஒன்றியத்தில் வாக்கு சேகரித்தார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் ஒன்றிய செயலாளர். பி. சேகர் ஒன்றிய குழு தலைவர் ஆர் கே தேவேந்திரன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி சஞ்சய் காந்தி உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பொம்மிடி,மல்லாபுரம்,திப்பிரெட்டிஹள்ளி உள்ளிட்ட இடங்களில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் கழக அரசின் சாதனைகளை விளக்கி பேசி வாக்கு சேகரித்தார்.உடன் ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன், பேரூர் கழக செயலாளர் கு.கௌதமன்,மற்றும் கூட்டணி கட்சியினர் உள்ளனர்.